செ.வெ.எண்: 204 நாள்:24.03.2018

# பத்திரிக்கை செய்தி

இந்திய தீபகற்பகத்தில் தமிழ்நாடு அதிக தட்பவெப்பத்தாலும் புவியின் தன்மையாலும் பேரிடர்களாலும் அதிக பாதிப்புக்குள்ளாகும் பகுதியாக தமிழ்நாடு உள்ளது என்றும் இயற்கை சீற்றங்களான புயல், வெள்ளம், நிலநடுக்கம், சுனாமி மற்றும் வறட்சி போன்ற பல காரணிகளாலும், தற்போதைய கால சூழ்நிலை மாற்றத்தால் அநேக இடங்களில் வெப்ப அலை வீசும் சூழ்நிலை உருவாகி உள்ளதாக இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை செய்துள்ளது.

அதன்பேரில் அதிக வெப்பம் நிலவும் காலங்களில் பொதுமக்கள் நண்பகல் 12.00 மணிமுதல் 3.00 மணிவரை நேரடியாக வெயிலில் செல்வதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெப்ப அலை வீசும் காலங்களில் பொது மக்களுக்கு ஏற்படும் உபாதைகள் மற்றும் அதற்கான அறிகுறிகளும் பாதிப்புக்குள்ளானர்களுக்கு வழங்க வேண்டிய முதலுதவி குறித்த விபரங்கள்

| பாதிப்புகள் | அறிகுறிகள் | வழங்க வேண்டிய முதலுதவி |
|---|---|---|
| வெங்குரு/ வேனற்கட்டி | தோல் சிவந்து மற்றும் வலி, வீக்கம் கொப்புளங்கல் | குளித்தல், சோப்பு பயன்படுத்தி உடலில் உள்ள எண்ணெய் பசை நீங்கும் வரை நன்கு தேய்த்து குளித்தல். கதர் ஆடைகள் அணிதல். |
| சூடு பிடித்தல் | கால் மற்றும் வயிற்று பகுதிகளில் வலியுடன் கூடிய சதை பிடிப்பு, கடுமையாக வியர்த்தல் | நிழலான பகுதிகளுக்கு செல்லுதல், வலியுள்ள உடல் பாகங்களில் லேசான மசாஜ் செய்தல் தண்ணீர் அருந்துதல், வாந்தி குமட்டல் ஏற்பட்டால் தண்ணீரை தவிர்க்கவும். |
| வெப்ப சோர்வு | கடுமையாக வியர்த்தல், தளர்வு ஏற்படுதல், சருமம் வரண்டு காணப்படுதல், வாந்தி மற்றும் மயக்கம் ஏற்படுதல் | குளிர்ந்த இடத்தில் படுக்க வைத்தல், ஆடைகள் தளர்வு செய்தல், ஈரமாக துணிகளை குளிர்வித்தல், குளிர்சாதன அறையில் தங்க வைத்தல், சிறிதளவு தண்ணீர் பருகசெய்தல் வாந்தி குமட்டல் ஏற்பட்டால் தண்ணீரை தவிர்க்கவும். மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துதல் அல்லது 108 ஆம்புலன்ஸ் உதவியை நாடுதல். |
| வெப்ப தாக்கு | உடலில் அதிக சூடு ஏற்படுதல், சூடான வறண்ட சருமம், கட்டுபாடு அற்ற நாடி துடிப்பு, மயக்க நிலைக்கு செல்லுதல். | வெப்ப தாக்கு ஏற்பட்ட நபரை மருத்துவமனைக்கு கொண்டு சென்று அவசர சிகிச்சை அளிக்கப்பட வேண்டும், தாமதித்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். உடல் சூட்டை தணிக்க குளித்தல் மற்றும் ஈரமான துணியை கொண்டு குளிர செய்தல். தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்தல். நீர் ஆகாரங்கள் தவிர்க்க வேண்டும். |

திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுமக்கள் எவரேனும் வெப்ப அலையினால் பாதிக்கப்பட்டால் 108 அவசர ஊர்தியை உடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட நபரை மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சைக்கு உட்படுத்துமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.